00015 (முழுப்பதிப்புரிமை உடையது)

**இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்**

இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சை 2013(1)

**குற்றவியல் சட்டமும் சான்றுக் கட்டளைச் சட்டமும் (03)**

3 மணித்தியாலங்கள்

**5 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
**அனைத்து வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.**

---

1. சான்றுக் கட்டளைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள வரைவிலக்கனங்களைக் கருத்திற்கொண்டு கீழ் வருவனவற்றை மிகச் சுருக்கமாக (ஓர் இரு வாக்கியங்களில்) விளக்குக.

(அ) நீதிமன்றம் (ஆ) காரணி (இ) பிரச்சினைக்குரிய காரணி (Fact in issue)
(ஈ) பொருத்தம் (உ) ஆவணம் (ஊ) ஒப்புக்கொள்ளல்
(எ) குற்றத்தை ஒப்புக்கொள்ளல் (ஏ) தடை உத்தரவு
(ஒ) நிருபிக்கப்படாத (ஓ) உண்மையென நிருபிக்கப்பட்ட

(20 புள்ளிகள்)

2. குற்றவியல் சட்டத்தின் பிரகாரம்

(அ) "களவு" என்பதனை வரைவிலக்கனப்படுத்துக. (05 புள்ளிகள்)

(ஆ) "பலாத்காரமாகப் பெறல்" என்பதனை வரைவிலக்கனப்படுத்துக. (05 புள்ளிகள்)

(இ) களவு கொள்ளையாக மாறும் மற்றும் பலாத்காரமாகப் பெறுதல் கொள்ளையாக மாறும் சந்தர்ப்பங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

3. (அ) சிறிசேன தனது அயலவரான தயாசேனவின் வீட்டிற்கு முன்னால் வந்து தயாசேனவின் மனைவியின் மானத்திற்கு பங்கம் ஏற்படும் வகையில் தயாசேனவிற்கு ஆக்ரோஷமாக ஏசி அவனைக் கட்டுப்படுத்த முடியாத கோபத்திற்கு உள்ளாக்கினான். சிறிசேன மீது கடுங் கோபமுற்றிருந்த தயாசேன வேண்டுமென்றே சிறிசேனவின் 8 வயது மகனை இழுத்துக் கத்தியால் குத்திக் கொலை செய்தான். தயாசேனவின் குற்றப் பொறுப்பு பற்றி பரீட்சிக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) ஜகத், விஜித்தினை ஏசித் தாக்கவும் செய்தான். இத்தாக்குதலினால் விஜித் மிகக் கடுமையாகக் கோபமடைந்தான். ஜகத்தின் மீது வெறுப்புக்கொண்டிருந்த சுகத் இச் சந்தர்ப்பத்தில் விஜித்தின் கடுங் கோபத்தினைப் பயன்படுத்தி ஜகத்தினைக் கொல்லும் நோக்கில் அக்காரியத்தினைச் செய்வதற்காக விஜித்தின் கையில் கத்தியொன்றினைக் கொடுத்தான். விஜித் அக்கத்தியினால் ஜகத்தினைக் குத்திக் கொலை செய்தான். விஜித் மற்றும் சுகத் ஆகியோரின் குற்றப் பொறுப்பு பற்றி பரீட்சிக்குக. (10 புள்ளிகள்)

4. தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ்;

(அ) வன்புணர்ச்சி இடம்பெற்றுள்ளதாகக் கவனத்திற் கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் யாவை? (10 புள்ளிகள்)

(ஆ) வன்புணர்ச்சி, தண்டனைக் கோவைச் சட்டத்திற்கு எந்த சட்டத் திருத்தத்தின் கீழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது? (அத் திருத்தச் சட்டத்தின் வருடத்தினையும் இலக்கத்தினையும் குறிப்பிடுக.) (05 புள்ளிகள்)

(இ) வன்புணர்சிக் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்பட்டவருக்கு விதிக்கமுடியுமான தண்டனைகள் யாவை? (05 புள்ளிகள்)

00015

5. (அ) தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ் தனியாள் பாதுகாப்பு உரிமை இல்லாத ஏற்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) தனியாள் பாதுகாப்பு உரிமையற்ற செயற்பாடுகள் யாவை?

(10 புள்ளிகள்)

6. (அ) டயஸ்ஸினால் ஆஸிரிக்கு எழுதப்பட்ட ரூபா 50,000 பெறுமதியான கடன் பத்திரம் ஆஸிரியிடம் காணப்படுகிறது. ஆஸிரி தன்னோடு கொடுக்கல் வாங்கல் செய்யும் கசுன் என்பவருக்கு மோசடி ஒன்றைச் செய்யும் நோக்கில் டயஸினால் அக் கடன் பத்திரத்தில் எழுதப்பட்டது என கசுனினை நம்பச்செய்யும் நோக்கில் அக் கடன் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு முன்னால் 1 என்ற இலக்கத்தை இட்டு அதனை 150,000 ரூபா ஆக்கியுள்ளார். தண்டனைக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய டயஸ் மற்றும் ஆஸிரி ஆகியோரின் குற்றப் பொறுப்பு பற்றி பரீட்சிக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) சுனில் என்பவர் 2013 மார்ச் மாதம் 20ம் திகதி மு.ப 10.30 மணிக்கு விமல் என்பவரைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சுனிலுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்படுகிறது. தேசிய நிதி வங்கியின் மருதானைக் கிளையில் சேவை புரியும் கமல் என்பவர் நீதிமன்றத்தில் சத்தியப்பிரமானம் செய்து சாட்சியம் கூறும் வேளை தாக்குதல் செய்ததாகக் கூறப்படும் தினத்தன்று காலை 10.00 மணி தொடக்கம் 11.00 மணி வரை தமது வங்கியின் கவுன்டரில் பணத்தினை வைப்புச் செய்வதற்காக சுனில் வருகை தந்திருந்தார் என அவர் அவ்வாறு வருகை தராதபோதும் கூறினார். தண்டனைக் கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கமல் செய்துள்ள குற்றத்தின் தன்மையினை விளக்குக.

(10 புள்ளிகள்)

7. வழக்கு விசாரனை ஒன்றில் சாட்சிகளை விசாரிக்கும் போது சாட்சி விசாரிக்கப்படும் ஒழுங்கு முறையினை விளக்குக.

(20 புள்ளிகள்)

8. (அ) 2002.12.19 அன்று பிறந்த கிசான் பாடசாலை செல்லும் ஆண் மாணவனாவான். அவன் துசானி என்ற யுவதியினை மானபங்கப் படுத்தினான் என்பதை நிருபிக்க முடியுமா என்பதனை சான்றுக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) அவுஸ்ரேலியாவின் சுமித்கோன் டயர் கம்பனி, இலங்கையின் சக்விதி, இறப்பர் ஏற்றுமதிக் கம்பனியிடமிருந்து இயற்கை இறப்பரினை கொள்வனவு செய்கின்றது. சுமித்கோன் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளர் திரு. இயன் சுமித் என்பவரினால் அனுப்பப்பட்டுள்ள கடிதம் ஒன்றில் காணப்படுகின்ற எழுத்துக்கள் அவருடையதுதானா என்பதை நிருபிப்பதற்கான தேவைப்பாடு ஒன்று எழுந்துள்ளது. சக்விதி டயர் கம்பனியின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பீ. காரியவசத்திற்கும் சுமித்கோன் கம்பனியின் இயன் சுமித் என்பவருக்குமிடையே, கையெழுத்து மூலம் எழுதியுள்ள கடிதங்கள் நீண்ட காலமாகப் பரிமாறப்பட்டுள்ளது. ஜெயந்த என்பவர் திரு. காரியவசமின் இலிகிதராவார். அவரது வேலை இயன் சுமித் அனுப்பும் கடிதங்களை பரீட்சித்து கோவைப்படுத்துவதாகும். செம்சன் என்பவர் காரியவசமின் புரோக்கராவார். இயன் சுமித் அனுப்பியுள்ள பல கடிதங்கள் சில உபதேசங்களைப் பெறுவதற்காக காரியவசமினால் செம்சன் என்பவருக்கு அடிக்கடி முன்வைக்கப்பட்டுள்ளதுடன் காரியவசம், ஜெயந்த அல்லது செம்சன் என்போர் எப்போதும் இயன் சுமித் கடிதம் எழுதுவதைத் கண்டதில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் காணப்படுவது இயன் சுமித்தின் கையெழுத்துத்தான் என்பதனை உறுதிப்படுத்துவதற்கு காரியவசம், ஜெயந்த மற்றும் செம்சன் ஆகியோரின் கருத்துக்கள் வழக்கின் சாட்சியங்களாகக் கொள்ளப்பட முடியுமா? என்பதனை சான்றுக் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் விளக்குக.

(10 புள்ளிகள்)

************